**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, B.Sc., L.L.M.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கள்கிழமை

**2057 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 02 ம் நாள்**

**அ.வ.எண்.81/2025**

**TNCB-13000082-2025**

திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், உடுமலை நகரம், பழனி சாலை, நாராயண பிள்ளை காலணி, கதவு எண். 37 ல் வசிக்கும் சண்முகம் மனைவி இந்து, சுமார் 49 வயதுள்ள சுமதி. --- வாதி

/ எதிர் /

1) திரு. வட்டாட்சிர் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகம், பொள்ளாச்சி

2) தமிழ்நாடு அரசு அதற்காக அதன் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள், மாவட்ட ஆட்சியாளர் அவர்கள், கோயமுத்தூர் .... பிரதிவாதிகள்

கடந்த 23.11.2002 தேதியில் பொள்ளாச்சி வட்டம். ஜமீன் ஊத்துக்குளி கிராமம், குமரன் வீதி. கதவு இலக்கம் 36 ல் இறந்து போன முத்துச்சாமி த/பெ குமாரச்சாமி என்பவருக்கு இந்த வாதி மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII, விதி 1-ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 07.04.2025

தாவா வியாஜ்ஜிய மூல நாள் 23.11.2002, 19.10.2019, 08.07.2021 மற்றும் 05.03.2025 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி தாலுக்கா, ஜமீன் ஊத்துக்குளி கிராமத்தில் ஆரம்பம்.

தாவா மதிப்பு ரூ.5,000/- மற்றும் இதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் ரூ.150/- தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 25(d)-ன்படி செலுத்தப்பட்டுள்ளது

.

**தாவா மதிப்பு விவரம்**

| | |
|---|---|
| வாதி கோரும் தாவா பரிகார மதிப்பு | ரூ.5,000/- |
| இதற்கான நீதிமன்ற கட்டணம் தமிழ்நாடு | |
| கோர்ட் பீஸ் ஆக்ட் 25(டி) ன் படி | ரூ.150/- |

இவ்வழக்கனாது, கடந்த 07.04.2025 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 15.04.2025

அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24.02.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.S.ஜெலஸ்டின் சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்பாணை</u>

1. **<u>முடிவில்,</u> கடந்த 23.11.2002 தேதியில் பொள்ளாச்சி வட்டம். ஜமீன் ஊத்துக்குளி கிராமம், குமரன் வீதி. கதவு இலக்கம் 36 ல் இறந்து போன முத்துச்சாமி த/பெ குமாரச்சாமி என்பவருக்கு இந்த வாதி மட்டுமே சட்டப்பூர்வமான இரண்டாம் நிலை வாரிசு என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒப்பம்/- (R. சுஜாதா)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொள்ளாச்சி

---

**தீர்ப்பாணை**
அ.வ.எண்.81/2025
நாள் : 16.03.2026
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
பொள்ளாச்சி.

---